# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

| | | |
|---|---|---|
| துணர் உச | திருவள்ளுவர் ஆண்டு ககளஎக<br>சருவதாரி—சித்திரை 1948—ஏப்பிரல் | மலர் க |


## பொழிற்றொண்டர் கருத்துரைகள்.

### நன்றியுரை

தமிழ்ப் பொழில் இருபத்து நான்காவது துணர் மலரத் தொடங்குகின்றது. தொடங்கும் இப்பொழுதில் பொதுவாகத் தமிழ் மக்களுக்கும், சிறப்பாகத் தமிழ்ப் பொழில் நேயர்கட்கும், நம் சங்க உறுப்பினர்கட்கும், புரவலர்கட்கும் எம் வாழ்த்தும் நல் விருப்பும் தெரிவித்துக் கொள்கின்றோம். தமிழ்த் தாய்க்குத் தொண்டாற்றப் பலப்பலர் முன்வருவது எமக்குப் பெரு மகிழ்ச்சி தருகின்றது. 'பழம்பணி புதுக்கியும், புதுப்பணி குயிற்றியும்' தமிழன்னையின் தூ நலம் காத்துப் போற்றும் விருப்பினராய்த், தமிழ்ப் பெருமக்கள் ஊக்கங் கொண்டு செயலாற்றும் திருப்பணியில் ஈடுபட்டிருப்பது, எமக்குப் பெரு மகிழ்வு தருகின்றது. புத்துணர்ச்சியும் புதுத் தருக்கும் தமிழ்ப் பெரு மக்களிடையே சிறந்து விளங்குகின்றன. தமிழ்த் தாயின் மேம்பாட்டில் அவர்கள் கொண்டுள்ள ஆர்வம் பெரிதும் மெச்சிப் போற்றத் தகுவதாம். தமிழ்த் தாய்ப் பெரும்பணி தலை சிறப்பதாக.

* * * *

## இந்தி மொழிப் பயிற்சி.

கட்டாய இந்திக் கல்வித் திட்டம் மறுபடியும் தலை காட்டியுள்ளது. இந்தியப் பொது மொழியாக இந்திக்கு எவ்வகைத் தகுதியும் இல்லையென்பது பலரும்--இந்தி விருப்பினரும்—ஒப்பிய கருத்தாகும். இலக்கிய வரம்பும் நிறைவு மில்லா மொழி யெனவும், தனித் தியலும் சொல் வளமும் பெறு மொழி யெனவும், பொது மொழியாய் வழங்கலாற்று மொழி யெனவும் காட்டும் அறிஞர்களது ஆழ்ந்த கருத்துக்கள் போற்றுதற் குரியன. மொழிவளம் மிக்க பல மொழிகளும் இருக்க, இந்தி மொழி மட்டும் கட்டாயப்படுத்தப்பட வேண்டிய கட்டாயமேதொன்றும் எமக்கு விளங்க வில்லை. எப்பாடுபட்டும் இந்தியைக் கட்டாயப்படுத்தும் இன்றியமையாமையும் தெரியவில்லை. அவ்வப் பகுதிகளின் மொழி அவ்வப் பகுதியிற் கட்டாயம் கற்கப்படுதல் முறையாகும். இன்றியமையாது வேண்டப் பெறுத எந்த ஒரு மொழியும் கூடப் பயிலுதல் வேண்டற்பால தன்று. இந்தியப் பொதுமொழி யாதற்கும் இந்திக்கு எத்தகுதியும் இல்லை யென்ற நிலையில் அதனைக் கட்டாயம் கற்கவேண்டு மென்பது ஒரு சிலரை மகிழச் செய்தற்கன்றி வேறெதற் கெனத் தோன்றவில்லை.

'நாகர வெழுத்தில் இந்தி மொழி' என்பதின் குறிப்பை யாம் அறியக்கூடும். தந்நலம் கலந்திருப்பது நன்கு விளங்குகின்றது. 'எழுத்தளவிலேனும் நம் மொழி தலை யெடுக்க வேண்டு'மென்று கருதும் வடமொழிப்பற்றுடையார் மனப்பான்மையை யாம் காணக்கூடும் தமிழ்மொழிக்கும், ஏனைய மொழிகட்கும் உரோம எழுத்துக்களைப் பயன் படுத்த வேண்டு மெனக் கருதும் அன்பர்கள், இந்தியக் கட்டாயப் பொது மொழி யாக்க நினைக்கும் இந்திக்கு உரோம எழுத்தைக் கொள்ளாது, வடமொழிக் குரிய நாகர வெழுத்தைப் பயன் படுத்த வேண்டு மென்னும் கருத்தின் உண்மையை யாம் எளிதில் அறியக்கூடும். வடமொழியை இந்தியப் பொது மொழி யாக்கும் குறிக்கோள் அடிப்படையாக விருக்கின்ற தென்பதைக் காட்டுகின்றது. பிறமொழிச் செலவில் வடமொழியை வாழ்விக்க விரும்புவது முறையாகுமா வென்பது நடுநிலையாளர் கருதுதற்குரியது.

* * * *

மேதகு உயர்திரு.-

**T. S. அவிநாசிலிங்கம் செட்டியார்**

அவர்களுக்கு =.

என் மதிப்பிற் குரிய ஐயா,

சருவதாரி, ஆண்டு, ஆனித் திங்கள், 'கலைமகள்' வெளியீட்டில், "வாழ்க்கையின் அடிப்படை—தைரியம்" என்னும் தலைப்புத் தாங்கிய தங்கள் கட்டுரையைப் படித்துக் கருத்துக்களின் புலமைத் திறத்தை உணர்ந்து களிப்புறுறேன். எனினும், அக் கருத்துக்களை வெளியிடுவதற்காகத் தாங்கள் ஏற்ற பிற மொழிச் சொற்களைப் படித்துத் திடுக்கிட்டேன்.

தங்கள் கருத்துக்களை விளக்க ஏற்ற தமிழ்ச் சொற்களிருக்கப், பிற மொழிச் சொற்களைத் தாங்கள் பயன் படுத்தியது எனக்கு மிக்க மனத் தளர்ச்சியையும், துயரத்தையும் உண்டாக்கியது. நான், ஒரு நாள், புகை வண்டியில் போய்க் கொண்டிருந்த பொழுது, ஒரு பார்ப்பனரும், அவர்தம் ஏழு வயதுள்ள மகனும் என் அண்டையில் உட்கார்ந்திருந்தார்கள். அந்தப் பையன் தன் தந்தையை நோக்கி, 'எனக்குத் தண்ணீர் வேண்டும்' என்றான். அதற்குத் தந்தை, 'ஏண்டா பறையன் மாதிரி தண்ணீர் என்கிறே! தீர்த்தம்னு சொல்லு' என்றார். நடவாது படுத்துக் கிடந்த ஒரு மொழியின் பல சொற்களையும், தமிழ் மக்கள் தங்கள் உரையாடலிலும் எழுத்திலும் பயன் படுத்தி, அம் மொழிக்குத் தள்ளாடி நடக்கும் ஆற்றலைக் கொடுத்தனர். இந் நன்மைக்குப் பலன், 'பறையன் பேச்சு' என்னும் இழி சொல்லே! உயர்நிலையாளராம் கற்றாரும், அறிவாளரும் தமிழ் மொழியைத் தவிர்த்துப் பிற மொழியைப் பயன் படுத்துவதே மேற்காட்டிய இழிசொல்லிற்கு இடம் தந்தது.

தமிழ்ப் பற்றுள்ளவரும், கல்வித் துறை அமைச்சருமாகிய தாங்களாவது எங்களுக்கு வழிகாட்டியாய்ப், பிறமொழிச் சொற்களைத் தங்கள் உரையாடலிலும், எழுத்திலும், பயன்படுத்தாவாறு மிகவும் வருந்திக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கோ. தியாகராசன்.


# யாழ் நூல்

## ஒரு சிறந்த இசைத் தமிழ் நூல்

அருட்டிரு.
விபுலாநந்த அடிகளார், B. Sc., அவர்கள்
இயற்றியது.

| | | | |
|---|---|---|---|
| மெல்லிய தாள்—தாள் உரை | ... | ரூ. | 15 0 0 |
| ,, துணி உரை | ... | ரூ. | 17 0 0 |
| தடித்த தாள்—தாள் உரை | ... | ரூ. | 18 0 0 |
| ,, துணி உரை | ... | ரூ. | 20 0 0 |

# பண்ணை கெழு பொருணுவணை.

திரு. த. பு. நவநீதகிருட்டினன், எம். ஏ., அண்ணாமலைநகர்.

> ஏரினு நன்றாம் எருவிடுதல் கட்டபின்
> நீரினு நன்று அதன் காப்பு. திருக்குறள்,

நாடோடி அலைந்தும், வேட்டை யாடித் திரிந்தும், இரை பெற்று உயிர் வளர்த்து வந்த மாந்த ரின மானது, நிலந் திருத்திப் பயிரிட்டு, உணவு பெற வறிந்த அஞ் ஞான்றே நாகரிகத்தின் வித்தும் நடப்பட்ட தாயிற்று எனலாம். அன்று தொட்டு, மக்களின் நல் வாழ்க்கைக் கென, உழவும், நில வளங் காத்லும் இன்றியமையாது இருந்து வருவன. அத் தொழில்கள் இரண்டும் ஒன்றை யொன்று தழுவினவையே. அவற்றைப் பொறுத்த தெரியற் செய்கைக்கேற்ற கேள்விகள், நிலக்கிடை யியல் பொருணுவணை (Colloidal Physics) என்ற தன்பாற் பட்டவை. ஆனல், அவ்வாறுன வினக்களுக்குத் தக்க விடைகளை யறிதல் கடினம். ஏனெனின், பயிர்த் தொழிலை யொட்டிய வினை நடக்கைகள் (Processes) இயற்கை யினலேயே பெரும்பாலும் நடந்தேறுவன. அவ்வா றுனவை மனிதன் தலையிட லான செயற்கைக்குச் சிறிது வரையே இடந்தருவன. ஆதலால், அத் தொழிலினுன புரிகைகள் (Operation) மாற்றப்பட்ட தெரியற் செய்கை (Scientific)ப் பொருட்டுக்களைக் காணுவாரே, அவற்றை ஏற்றுக்கொள்ளல், வேண்டும். ஆயினும், பொருணுவணையோர் (Physicists) பயிர்த் தொழில் வளர்ச்சிக்குப் பயனுறு வண்ணமாக ஆற்றற் குரிய ஆராய்ச்சிகள் பலவுள.

பயிர்த் தொழிற்பாற் பட்ட ஆய்வுக் குகந்த சோதனை மன்றம் பண்ணையே. திறந்த வெள்ளிடை யான அம்மன்றங் கொண்ட ஆய்வுப் பொருள்கள், நிலத்திலுள்ள நானு வகை யான துகள்கள் சேர்வான திரட்சிக்களே. இயைபுக கெழு மலைப் பொறுத்து, அவை அயிரிசார்வின வாகவேனும் (Siticous), சுண்ணவணவின வாகவேனும் (Chalky) இருப்பன;

பருமனைப் பொறுத்துப் பெருங்கல்லி னளவினின்று களிமண் கொண்ட நொய்களி னளவு வரை வேறுபடுவன. நிலத்தி லுள்ள மற்ற உறவித்தகவிலாப் (Inorganic) பொருள்கள் உலோகப் புல்ல லான உப்பங்களும் (Metallic salts) உயிரிகளு மாம் (Oxides); நிலத்தின் பொருண்மைக் கிழமைகளைப் பற்றிக் கருதுங்கால், அவற்றை ஒரு பொருட்டாய்க் கொள்ள வேண் டிய தில்லை. உறவித்தக விலாத் துண்டத் துறும லான அவற் றைத் தவிர, உறவித்தக வுற்றவற்றி னீட்டம் நிலத்திலுள்ளது. அத் திரளி லடங்கின பொருள்கள் பருமனிற் சிறியனவே யாயினும், பெருந் தொகையினவை. பயிர்த் தொழிலைப் பொறுத்து அவற்றில் முக்கியமானவை, முறிப்பூஞ்சுகளும் (Humus) நொசித்தனுக்களு (Bacteria) மாம். இவையே யன்றி காற்றும், நீரும், நிலத்தின்கண் ணிருப்பன; மீதிருந்து, அவை நிலத்தினுள் இறங்குவன; ஓரோ ரமையம் அடியிலிருந்து மிசை யேறுவன.

நிலங்கொண்ட நொய் மணலானது பாறைப் பாங்குகள் தேய்வுறலினின்று படிகிறது. பாறைகளின் கடினப் பகுதி கள் தேய்ந்து பொடியாய் ஆகா கடினம் குறைந்த பகுதி கள் நீரோட்டத்தால் அறுக்கப்பட்டு, பொடி யாகி, சேய்த் துப் புலங்களுக்கு அந் நீரோட்டத்தாலேயே அடித்துக் கொண்டு போகப்படுகின்றன அங்ஙனம் பாறைப் பகுதிகள் நீர்ப்போக்கால் அறுக்கப்பட்டு, நொறுங்கலுற்று நீரால் அடித் துக்கொண்டு போகப்படலை யொட்டிய படிப்படித் தொடர்ச்சி யான நிலைமைகளின் அறிகுறிகளை, கிணறு வெட்டற் கென நிலத்தைத் தோண்டும் போது, அக் கேணியின் ஞாங்கர்த் தோற்றத்தில் கண்ணுறலாம். அவ் வுழுவலை யொட்டிக் காணப் பெறும் நில வரலாற்றை உன்னிக் கற்றற் கென, பல வளவின வான ஆழங்களி லுள்ள நிலப்பாங்கர்களினின்று, முறையே, எடுக்கப்பட்ட உறழ்த்திறங்கள் (Samples) அவ் வவற்றில் புல் லுதலான துகள்களின் பருமனளவுகளைப் பொறுத்த தொகுதி களாய்ப் பிரிவினை யான வறு, பகுப்பாய்வு (Analysis) செய் யப்படுகின்றன. பகுப்பாய்வுக் குற்ற கருவிகள் மண் தகவு குணிப்பாளருக்கு (Land surueyors) துணை தரும் பொருட்டு முதனுய் அமைக்கப்பட்டன. அக் கருவிகளின் இணை கொண்டு, அனனர் பலவாறுன மண் திறங்களைத் தக்கவாறு வகையீடு செய்கின்றனர். தகையீடாய் (Specimen) எடுத்துக் கொள்ளப்பட்ட மண்ணுங் கட்டி யொன்று பகுப்பாய்வு செய்

யப்படற்கு முன் நீர் வற்ற நன்கு காயவைக்கப்படுகிறது. பிறகு அது நிறுக்கப்படும். அதன் பின், அது கொண்ட எரிவுத்தகை யான பொருள்கள் கொளுத்தப்பட்டு நீங்குமாறு மேலும் சூடேற்றப்படுகிறது. அப் பொருள்கள் தீய்ந்து அகன்ற பிறகு, மண் கட்டி மறுபடியும் நிறுக்கப்படுகிறது. இந் நிறைக்கும் முன்னான நிறைக்கு முள்ள வேற்றுமை யானது, அம் மண் கொண்டிருந்த முறிப்பூஞ்சின தாம். மண்ணி னமைந்த கரியேற்றுக்களின் (Carbondtes) நிறையானது, அவற்றைப் புளிகை (Acid) கொண்டு அகற்றின பிறகு எஞ்சின மண்ணை நிறுத்தலால் பெறும் துலத்திற்கும், அவை ஒருவப்படு முன்னான நிறைக்கு முள்ள வேற்றுமை யினால் அறியப்படுகிறது. எஞ்சின மண் காண்டம் இடிக்கப் படுகிறது. இடித்துப் பெற்ற மண் கூறுகளில் 0·2 மில்லி மீட்ட ரளவை விடப் பெரியவை சலித் தெடுத்து விடப்படுகின்றன. சல்லடைக் கண்களி னூடே இறங்கின சிறு துகள்கள் படிவைத் தேக்கத் தொட்டி (Sedimentation tank) என்றதனுள் தூவப்படற்குத் தக்கவாறு யிருப்பன. மண் நொய்கள் நீரில் தோய்ந்தபோது, அவற்றை முத்தைகளாய் ஈண்டும்படி பண்ணுகிற சாந்துப்பொருள் மண்ணில் கலந்துள்ளது. ஆதலால் அவை அங் ஙனம் கட்டி கட்டாமலிருக்கும்படி அமைத்தற்கென, தொட்டி நீரில் நீராக்கை யீருயிரி (Hydrogen peroxide) கலக்கப்படும். அதன் பிறகு அந் நீர் நன்கு குலுக்கப் படுகிறது. நீரைக் குலுக்கி விட்ட வுடனேயே, அளவைகள் செய்தலினின்று, மண் றுகள்கள் அவற்றின் பருமனளவுகளை யொட்டி எவ் வாறான தொகைகளைக் கொண்ட வீதங்களிலா யிருப்பன என்பதைக் கணக்கிடலாம். பொதுவாக அவ் வெண்ணிக்கைகள் நிகரா யிருப்பன. ஆயினும், மண் ணெடுக்கப் பட்ட நிலப் பாங்கைப் பொறுத்தவாறு ஒன்றி னொன்று வேறுபடும் உறழ்த் திறங்க ளானவை, வேற்றுமையான தொகை வீத மடங்குகளைக்கொண்டிருப்பனஎனத்தெரியப்பட்டுள்ளன. மண் வகைகள் ஒவ் வொன்றும் அத னதனைப் பொறுத்தவாறாக, ஓரளவுப் பரும னான நொய்களை மற்ற வளவினவற்றை விட மிக்க தொகையினதாய், முறையே கொண்டிருப்பன, எனக் காணப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டு ஒன்று கூறலாம். பொதுவான களி மண்ணில் ·05 மி. மீ. அளவான துகள்கள் பெருந் தொகையி லிருப்பன. உளை மண்ணில், 0·1 மி. மீ. அளவான துகள்களே எண்ணிக்கை மிக்கனவா யிருப்பன.

இனி, உழுதலின் விளைவுகளைக் கருதலாம். உழுதல் என்ற பண்டைதகுப் புரிகை, நிலத்தின்மீது ஆற்றப்படுவது. அவ் வினைச் செயலின் நோக்கங்களி லொன்று, மண் பகுதிகளைப் புரட்டி, அவற்றிடை காற்று விரவும்படி அமைத்து, நாளடைவில் பெருங் கட்டிகள் உடையுண்டு தூளாகும்படிச்செய்தல் என்பது. கதி ரறுத்த தாள்கள், களைச்செடிகள் இன்னோரன்னவை அழுந்தினவாறு புதையுறலால் மண்ணிலான உறவித்தகவு அடர்ந்தபடி செய்தல் என்பது அந் நோக்கங்களில் இன்னொன்று. இன்னொரு நோக்கம், விதையிடற்கேனும், நாற்று நடுதற்கேனும் தக்க படைசால் நடவை வெட்டல், என்பது. உழும்போது, ஏரின் உழுபடையால் கட்டிகள் கிளப்பப் படுகின்றமையின், கிராவண வலிமையை (Gravity) எதிர்த்து வேலை செய்விக்கப் படுகிறது. அவ் வாறு ஆற்றப்படற் கென, ஏரை யிழுத்துச் செல்லும் மாடுகள், குதிரைகள் அன்றி இயக்கப் பொறிகள், என் றினவற்றினின்று பெறப்படும் ஆற்றலி னளவு இயன்றவரை குறைந்த வாறு யிருத்தற் கென சிறந்த உழுபடை வடிவம் எவ் வாறு யிருத்தல் வேண்டும் என்பதைக் காணும் பொருட்டு மிக்க ஆராய்ச்சி பண்ணப்பட்டுள்ளது. மண் கட்டிகளைக் கிளப்பற்கு முன் கலப்பையின் படைவாளானது நிலத்தைக் கீழ்தல் வேண்டும். அப்போது, பாகு நீர்மையான (Viscosity) வலிமைகளை எதிர்த்து வேலை செய்விக்கப்படுகிறது. படைவாளின் அறுப்பை எதிர்க்கும் களிமண்கள் ஒரே திறத்தின வல்ல, என்பதைத் தவிர, மற்ற போக்குகளைப் பொறுத்து அவ் வலிமைகள் ஒத்திருப்பன. அவையெல்லாம் சரிவுறுத்து மிடலை (Shearing Stress) எதிர்க்கும் வகையினவை. அவ்வாறனமையின், அம் மிடல்களை ஏலு நள்ளுக் குழல்கள் Concentric cylinders) அமைந்த கருவியைக் கொண்டு அளவிடலாம். ஒரே வயலில் பல பகுதிகளி லுள்ள மண்கள், அவற்றிடையான கோவைத் தர (Texture) வேற்றுமைகளையும், அவை முறையே கொண்டுள்ள நீரளவின் வேறுபாடுகளையும் பொறுத்து வேறுபட்ட ஒட்டு நசைத்தகவுகளைக் (Cohesion) கொண்டிருக்கலாம். இன்னும் தட்ப வெட்ப நிலை மாற்றங்களை யொட்டியும் ஒட்டுநசைச் தகவுகள் வேறுபடலாம். இங்ஙனம், இடத்தையும் காலத்தையும் பொறுத்து ஒரு கழனியி லுள்ளேயே, ஏரிழுப்பு வலியாற்றலி னளவு வேறுபடுவ தாகும். ஆயினும், வய லொன்றை உழுதற்கான கலப்பையால் ஆற்றப்படும் வேலையி னளவு காணும்

(30 ஆம் பக்கம் பார்க்க)

# திருக்குறள்
## பொன்னுரைப் பகுதிகள்.

உரைகாரர்: கொக்குவில், திரு. வ. பொன்னையா, B.A.(Hons). Ph.D

(முற்றொடர்ச்சி துணர் 23, மலர் 12, பக்கம் 372.)

### தவம்.

8. ஒன்னார்த் தெறலு முவந்தாரை யாக்கலு
மெண்ணிற் றவத்தான் வரும்.

இ-ள். ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்—தமக்கு ஆகாதன செய்வாரை அழித்தலும் ஆவன செய்வாரை ஆக்கலும் ஆகிய இவ் விரண்டும்; எண் இல் தவத்தான் வரும்—எண்ணுதலின் நல்கூர்ந்த தவங் காரணமாக உளவாம், ஆகலான் எண்ணுதலிற் பொலிவுற்ற தவஞ் செய்க எ-று.

உம்மை எண்ணும்மை. அதுதொகை பெறுது வருதல் 'உம்மை யெண்ணுமென வெனெண்ணுந், தம்வயிற் றொகுதி கடப்பா டிலவே' என்னுஞ் சூத்திரத்தா னென்க. எண் வினைப்பெயர். அது 'கெடுவாக வையா துலகம்' என்புழிக் கெடுவென்பது புடைபெயர்ச்சியை யுணர்த்துந் தல் விகுதிகெட்டு நின்றாற்போல அவ்விகுதி கெட்டு நின்றது. மூன்றனுருபு காரக வேதுப் பொருட்டு. எண்ணுதல் என்பது கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டையென நான்கு வகைப்படும்.

இறை, உயிர், கட்டு என்னும் முப்பொருள்களின் பொது வியல்புகளைக் கேட்டல், சிந்தித்தல் என்னும் இரு

திறத்தானும், அவற்றின் சிறப்பியல்புகளைக் கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை என்னும் நான்கு திறத்தானும் உணர்ந்து, அம் முப் பொருள்களுள் விள்ளற் பாலதனை விண்டு அதனால் வருந் துன்பத்தின் நீங்குதலும், கொள்ளற் பாலதனைக்கொண்டு அதனால் வரும் இன்பத்தை நுகர்தலு மாகிய பயன் பெறுதற் கேதுவாகிய சாதனஞ் செய்வாரே தவஞ் செய்வாராவர். இவர் தமக்கு ஆகாதன வென்றோ ஆவன வென்றோ கொள்ளும் பொருள்கள் உலகத்தின்கண் இல்லாமை பற்றி இவர்க்கு ஒன்னருமிலர். உவந்தாருமிலர். ஆகையான் ஒருவரைத் தெறலும் வேறொருவரை ஆக்கலும் இவர்மாட்டு இல்லை யென்க.

இனி இவ் வகையன்றிக் கேட்டல் முதலியவற்றுட் குறைபா டுடையராய்த் தவஞ் செய்வா ராவார் விள்ளற் பாலதனை விள்ளாதவருமாய் அதனால் வருந் துன்பத்தின் நீங்காத வருமாய் நின்று தமக்கு ஆகாதன செய்வாரை அழித்தும் ஆவன செய்வாரை ஆக்கியும் இவற்றானே தம் தவத்தின் வழி இயவ ராவார் என்று கூறிய வாறாயிற்று.

இக் குறளுக்குப் பரிமேலழகர் 'தம் அறத்திற்குப் பகையாய் அழிவு செய்தாரைக் கெடுத்தலும் அதனை யுவந்தாரை உயர்த்தலுமாகிய இவ் விரண்டையுந் தவஞ் செய்வார் நினைப்பாராயின் அவர் தவ வலியான் அவை அவர்க்குள வாம்' என்று பொருள் கூறி, 'முற்றத் துறந்தார்க்கு ஒன்னாரும் உவந்தாரும் உண்மை கூடாமையின் தவத்திற் கேற்றி யுரைக்கப் பட்டது. எண்ணினென்றதனான் அவை யெண்ணமை இயல் பென்பது பெற்றாம். ஒன்னார் பெரியராயினும் உவந்தார் சிறியராயினும் கேடு மாக்கமும் நினைந்த துணையானே வந்து நிற்குமெனத் தவஞ் செய்வார் மேலிட்டுத் தவத்தினது ஆற்றல் கூறியவாறாயிற்று.' என்று உரை விளக்கமுங் கூறினார்.

தவஞ் செய்வார்க்கு முற்றத் துறவாத நிலையில் ஒன்னாரையும் உவந்தாரையும் முறையே கெடுத்தலும் உயர்த்தலு

மாகிய குணப் பண்புகள் ஒரோவொரு வழி தொழிற் பண்புகளாகி விளங்கி நின்று, ஒன்னரு முவந்தாரும் உண்மை கூடாத முற்றத் துறந்த நிலையில் அவை குணப் பண்புகளாயே விளங்காது மறைந்து நிற்கு மென்று கருதித் தவஞ் செய்வார் மேலிட்டுத் தவத்தினது ஆற்றலை யெடுத்துக் கூறு முகத்தானே, அவ்வாற்றலை விழைவாராவார் தவஞ் செய்தல் வேண்டு மென்பதே பரிமேலழகர் கண்ட வுரையாயின், அது உரையன்மை யறிக.

ஒன்னரைக் கெடுத்தலும் உவந்தாரை உயர்த்தலுமாகிய இரண்டு பண்புகளும் நாற் சித்தியானு முளவாதல் பற்றி சிறுபுல் வெட்டப் பெருங் கோடரியை யுதவியவன் போல் அப் பண்புகளை யுண்டாக்கிக் கோடற் பொருட்டுத் தவத்தினைச் செய்யுமாறு பணியார் என்பதனானும், அப் பண்புகளை விழைவாராவார் தவஞ் செய்தற்குத் தகுதி வாய்ந்தவரல்லர் என்பதனாலும், அன்னார் ஒருகால் தவத்தினைச் செய்யினும் அவ் விழைவு அவர் தவத்தினைக் கொல்லுமென்பதுபற்றி அக் கொல்லப்படுந் தவத்தினைச் செய்யும் வகை கூறுரென்பதனாலும், ஆசிரியர்க்கு அது கருத் தன்றென்க.

இப் பாட்டு என்னுதலிற்றோ வெனின் :— துன்பந் தவிர்த்துப் பேரின்பம் நுகரவேண்டின் இறை, உயிர், கட்டு என்னும் முப்பொருள்களின் பொதுவியல்பு சிறப்பியல்புகளைக் கேட்டல் முதலிய நான்கு திறத்தா னுணர்ந்து, அம் முப்பொருள்களுள் விள்ளற்பாலதனை விண்டு கொள்ளற்பாலதனைக் கொண்டு தவஞ் செய்க எ-து.

9. இலர்பல ராகிய காரண நோற்பார்
சிலர்பலர் நோலா தவர்.

இ-ள் இலர் பலர் ஆகிய—ஞானத்தி னல்கூர்ந்தார் பலராதற்குக் காரணம்; கார் அண நோற்பார் சிலர்

நோலாதவர் பலர்—அஞ்ஞானம் தம்மொடு பொருந்தி நிற்பத் தவத்தினை முயல்வாராவார் சிலர் என்பதுவும், அது பொருந்தி நிற்ப முயலாதாராவார் பலரென்பதுவு மாகிய இவ்விரண்டுமே, ஆகலான் அஞ்ஞானத்தை நீக்கும் வகையறிந்து தவஞ் செய்க எ-று.

எண்ணும்மைகள் விகாரத்தாற் றொக்கன. ஆகிய வென்பது எதிர்காலத்துக்கண் காரியப்பொருட்டாய் வந்த செய்யிய வென்னும் வினையெச்சம். அதனை 'நின்னுடைய வேள்வி காணியவந்தார்' என்பதனுலு மறிக. கார் உவமை யாகுபெயர். அது அஞ்ஞானம் என்னும் பொருள் தந்து நின்றது. அண என்பது நிகழ் காலத்துக்கண் 'இது நிகழா நிற்க' என்னும் பொருட்டாய் வந்த செயவெனெச்சம். கார் அண என்றமையால் இலர் என்றது ஞானத்தி னல்கூர்ந்தாரை. கார் அண நோற்பாரென்றும் கார் அண நோலாதவ ரென்றும் இருவழியுங் கூட்டியுரைக்க.

கார் அண நோற்பார் சிலராதலின் இலர் சிலராவரே யன்றிப் பலராதல் ஆகாமை யானே, அவர் பலராதற் பெறும் பொருட்டு வேறுமோர் ஏதுக் கூறுமுகத்தானே நோலாதவர் பலர் என்ற காரணமுந்தந்தார். நோலாதவர் பலராயினும் ஆளுடைய பிள்ளையார் போன்று சிலர் இம்மை நோன்பின்றியும் ஞானச் செல்வம் எய்தி நிற்ப இலர் பலராகாமை படினும் படுமென்பது கருதி அது அவ்வாறு படாமைக் காப்பாராய்க் கார் அண நோலாதவர் பலரென ஏதுவை விசேடித்தும் அவ் வகையினர் பல ரென்றார்.

இனி இலர் பலராதற்குக் கார் அண நோலாதவர் பலர் என்பதே யமையு மெனினும் கார் அண நோற்பார் சிலர் என்ற ஏது எற்றுக்கு என்றற்கு, அவ்வகை நோற்பார்க்கும் ஞானச் செல்வம் உண்டாகாது என்றறிவித்தற்கே யென்க.

இக்குறளுக்குப் பரிமேலழகர் 'உலகத்துச் செல்வர்கள் சிலராக நல்கூர்வார் பலராதற்குக் காரணம் யாதெனின், அது தவஞ் செய்வார் சிலராகச் செய்யாதார் பலராதல்' என்னும் உரையையும் 'செல்வ நல்குர வென்பன ஈண்டறி வினது உண்மை யின்மைகளையுங் குறித்து நின்றன. நோற்பார் சிலரென காரணங் கூறினமையான் காரியம் வருவித் துரைக்கப்பட்டது. தவஞ் செய்யாதார்க்கு இம்மை யின்பமுமில்லை யெனவே இதனால் அவரது தாழ்வு கூறப் பட்டது' என்னும் உரை விளக்கத்தையுந் தந்தனர்.

நோலாதவர் பலர் என்னும் ஏதுபற்றி நல்கூர்வார் பலராவரென்று கூறவே, நோற்பார் சிலரென்றும் இவ் வேதுவானே நல்கூர்வாராகார் சிலரென்றும், இவருள்ளும் செல்வர் சிலரென்றுங் கூறாமலே யமைந்து கிடப்ப, இரு ஏதுக்களையும் ஒரு மேற்கோளையுந் தந்து மற்றைய மேற் கோளை வருவித்துரைக்கும்படி ஆசிரியர் வைத்தாரென்று பரிமேலழகர் கருதினாராயின், அது ஆசிரியர்க்குக் கருத்தன் றென்க.

இனி, ஆசிரியர் தவத்தைத் துறவறவியலில் வைத்த காரணத்தானே தவம் ஞானச் செல்வத்தினை யுதவுந் துறவை அடிக் கொண்டுள்ள தென்பதே கொள்ளக் கிடப்ப, அழகியார் தவமும் அதனது இன்மையும் முறையே ஞானச் செல்வத்திற்கு மறுதலையாகிய பொருளது உண்மை யையும் இன்மையையும் உளவாக்கி நின்றனவென்று கருதி யது தகாதென்க. தகுமெனின், கட்டுக் கேதுவாகிய பொருளை யுளவாக்கும் அத்தகைத் தவத்தைச் செய்யற்க என்பதே இப்பாட்டின் பொருளாகும். இவ்வெண்பா இப்பொருளை நுவலா தென்பது தேற்றம். ஆகலான் அழகியாருரை உரையன்மை யறிக.

இனிச் செல்வ நல்குரவு என்பன ஈண்டு அறிவினது உண்மை யின்மைகளையுங் குறித்து நின்றனவென்று கூறுவ

தொழிந்து பொருளினது உண்மை யின்மைகளையுங் குறித்து நின்றனவென்று கூறுவாரேல் அவ் வுரையில் பொருளுண்டென்க. பொருள் படுமாறு யாங்ஙனமெனின் மலச் சார்பு நீக்க முயலாது, தவஞ் செய்வார்க்குப் பொருளும், அது நீக்க முயன்று தவஞ் செய்வார்க்கு ஞானமுந் தலைப்படுதல் கண்கூடு என்க.

இப் பாட்டு ஞானத்தி னல்கூராமை வேண்டின் அஞ் ஞானம் நீக்குஞ் சாதனந் துணைகொண்டு தவஞ் செய்க எ-து.

10. வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவ
மீண்டு முயலப் படும்.

இ-ள். ஈண்டும் வேண்டிய வேண்டியாங்கு எய்தலால்—முயன்றால் மறுமைக்கண்ணேயன்றி இம்மைக் கண்ணும் விரும்பிய பயன்களை விரும்பிய வண்ணமே பெறலாமாகலான்; செய்தவம் முயலப்படும்—செய்யப் படுவதாகிய தவம் அறிவுடையோரான் முயலப்படும், ஆகலான் தவஞ்செய்க எ-று.

எதிரது போற்றிய வெச்ச வும்மை விகாரத்தாற் றொக்கது. வேண்டிய என்பது வினைப் பெயர். வேண்டிய வாங்கு என்பது பெயரெச்சவீறு தொகுத்தல் விகாரம் பெற்று வேண்டியாங்கு என நின்றது. அதனை இல்லாகி யாங்கு என்பதனானுமறிக. செய்தவம் வினைத்தொகை. அது செய்குன்று என்பது போலச் செயப்பாட்டு வினைப் பொருளில் வந்ததென்க. அறிவுடையோரால் என்பது சொல்லெச்சத்தாற் பெறப்பட்டது.

மறுமைக்கண் மேற்கதி வீடுபேறுகளும் மறுமைக் கண்ணேயன்றி இம்மைக் கண்ணும் பேரறிவு பேரருளுடைமை முதலியனவும் தவத்தானே பெறலாமாகலான், இவற்றுள் எதனை விரும்பித் தவஞ்செய்யினும் அதனைப் பெறலாம் என்று கூறியவாயிற்று.

இக்குறளுக்குப் பரிமேலழகர் 'முயன்ருல் மறுமைக் கட்டாம் வேண்டிய பயன்கள் வேண்டியவாறே பெறலாமாகலான் செய்யப் படுவதாய தவம் இம்மைக்கண் அறிவுடையோரான் முயலப்படும்' என்னும் உரையையும் ஈண்டென்பதனுன் மறுமைக்கண் என்பதும் பெற்ரும். மேற்கதி வீடு பேறுகள் தவத்தா னன்றி எய்தப் படாவென்பதாம்' என்னும் உரை விளக்கத்தையுந் தந்தனர்.

செய்தவம் முயலப்படும் என்ற துணையானே மறுமைக்கண் ணன்றி இம்மைக்கண்ணே அறிவுடையோரான் முயலப்படும் என்பது குறிப்பாற் பெறக்கூடியதாயிருக்க ஈண்டு முயலப்படும் என்று ஒருசொல் மிகைபட ஆசிரியர் கோத்தாரென அழகியார் உரைகண்டமை புகழ்தற்குரிய தொன்றன்று. ஈண்டென்பதில்லையேல் செய்தவம் இம்மையினும் மறுமையினும் அறிவுடையோரால் முயலப்படும் என்றன்ருே பொருள்படு மென்றுற்கு, அதனுமென்னே, குறள் பொருளிற் குன்ருதென்க.

வேண்டிய பயன்களைப் பெற விரும்புவாருள் ஒருசாரார் சோம்பிய வுள்ளத்தராய்ச் செய்தவம் மறுமையிலே முயலுவம் என்று கருதினராய் அதுபற்றி இம்மையில் தவஞ் செய்யா தொழிந்தாரை வழிப்படுத்துதற்கு ஈண்டு முயலப்படும் என்று கூறினுரெனின், அவ்வகையினேர் அறிவுடையோரெனப்படார் ஆகையான் அவரைக் குறிக்கொண்டு இக்குறள் எழுந்ததன்று என்பதுவே ஏதுவாக ஈண்டு முயலப்படும் என்பது ஒருசொல் மிகைபடக் கூறியவாருகுமென்க. அவ்வகையினேர் அறிவுடையோராகாமை எற்ருற் பெறுதுமெனின், அவர் இம்மையில் மடிவுடை யுள்ளத்தா ராதலும் மறுமையிற் றவஞ் செய்தற்கேற்ற அறிவுடைமை தமக்கு வந்தெய்துமென்று ஒரு காரணமுமில்லாது கொள்ளுதலுமாகிய இரண்டானுமே யென்க.

இனி 'ஈண்டும் வேண்டிய வேண்டியாங் கெய்தலால்' எனினும் மிகையாகாதோ வெனின், ஆகாதென்க. மிகையாகு மென்பாராவார் வேண்டிய வேண்டியாங் கெய்தலால் என்ற துணையானே இம்மையினும் மறுமையினும் வேண்டிய பயன்களைப் பெறலாம் என்று பொருள் படுதற் காரணத்தானே ஈண்டும் என்பது எற்றுக்கென்பார். மிகையாகாமை கூறுதும். அறிவுடை யோருள் ஒருசாரார் கூறுவர் 'தவமென்பது இம்மையிற் பயன்றராது மறுமைக் கண்ணே தருமெனின்,' மறுமை தானும் உண்டென்று சாதித்தற்குப் பலரானுந் தழுவப் படுங் காண்டல் கருதல் என்னும் இரண்டளவைகளுந் துணைசெய்யா.' இக்கருத்தினை யுட்கொண்டு இவர் தவஞ் செய்தலைத் தவிர்க்கினுந் தவிர்ப்பர். இவரை வழிப் படுத்தற் பொருட்டே மறுமைக் கண்ணே யன்றி இம்மைக் கண்ணும் தவத்தாற் பயன் எய்தலாம் என்னும் பொருள்பட 'ஈண்டும்' என்பது வேண்டிற்றென்க.

இனிப் பரிமேலழகர் மேற்கதி வீடுபேறுகளைத் தானும் தவத்தாற் பெறலாம் என்னும் பொருள்பட உரையிற் கூறி விட்டு 'மேற்கதி' வீடுபேறுகள் தவத்தானன்றி எய்தப் படா வென்பதாம்' என்று உரை விளக்கத்திற் கூறியது அவரது நுண்மாண் புலமைக்குப் பொருந்தாமை யறிக.

இப் பாட்டு என்னுதலிற்றோ வெனின் :— இம்மைக் கண் பேரறிவு முதலியன வற்றையும் மறுமைக்கண் மேற்கதி வீடு பேறுகளையும் பெற விரும்பின் தவஞ் செய்க எ-து.

# மாரியும் பாரியும்.

திரு. K. சோமசுந்தரம் பிள்ளை, B. A., B. L., தஞ்சை.

மக்களுயிர்கள், உலகிற்கு நிமித்த காரணமாகிய இறைவன் அருள்வழி, உலகின்கண் ஒழுகினாலன்றி, துன்பமேலிட்டால் வருந்துவதென்பது உறுதி. இறைவனன்றி, உயிர் நிலையமாகிய உலகம் உளதாகா தாகலான், உலகத்துயிர்ப் பொருள்களையும், உயிரில் பொருள்களையும் இயக்கவல்லது இறைவனது அருள் ஆற்றலாகும். மக்கள் பயிலற்கும், பயின்றவழி, ஆய்ந்து தெளிவு பெறற்கும் கருவியாக வுள்ளது, இப் பொருள்களு மடங்கிய உலக மாதலான், உலகம் இயற்கை நறுநாலாகுமென்க. இத் தகைய புற இயற்கைப் பொருள்களை ஆயும் புலம் படைத்த தமிழ்ப் பெருங் குடிமக்கள், உரு வகையால் வேறு வேறாய் காணப்படும் உலகி லுள்ள பொருள்களின் கண், காட்சி வகையானும் கருத்து வகையானும் இறைவன் ஒருவனே அமைந்திருக்கின்றா னென்பதை யுணர்ந்து, இறைவனது அருட் குணமதனை நினைந்து நினைந் துருகி நிற்கும் பெற்றியராய்த் திகழ்ந்து, இறைவனது அருட் டன்மைகள் புல னுதற் குரிய உலக யியற்கைகளைப் பரிந்து பாடும் ஒழுக்கத்தினை மேற்கொண்டனர். இத் தகையவாறு புற வியற்கைகளை அகத்துணர்வொடு ஒன்றவைத்து இயற்கை முறை வழுவாது இறைவன் அருட்டன்மை புல னுகும்படி, உணர்வு கவரும் வகையில் உள்ளதை உள்ளவாறுரைத்து இனிமை யூட்டுதலே தமிழ் மர பாகும்.

உலகியற் பொருள்களில் பொருந்தி மறைந்து நிற்கும் உணர்வு கவருமியல்புகள் யாவும் இறைவனின் அருள் விளக்கங்க ளாதலான், அவ் விளக்கங்கள் மூலம், பயின் றாழ்ந்து தெளிதலா லடையும் பயனுகிய வாழ்க்கையின் நலன், விழுமியதாகின்றது. உளங் கவரும் வன்மை வாய்ந்த இச் சிறப்பின் உளவு கூறும் நூல்கள் தமிழ் மொழியி லல்லாது, வேறெம் மொழியிலும் காணல் இயலாது. பண்டைத் தமிழ்ப் புலவர்கள் உல கியற்கைகளை அறிந்து, பாடுதலின் வாயிலாக அறிவு

உணர்வு முதலாய அகத்தெழு இயல்புகளைக் கிளரச் செய்து, அவை தம்மை மெய்ம்மையிற் படிப் படியாகப் பையச் செலுத்தி, முடிவில் முதல்வன் திருவருள் நிலையில் தேக்குற் றிருக்கும்படி, அம் முதல்வனின் அருட் டன்மைகளைத் தக்க சொற்களில் அமைத்துத் திறம்பட விரும்பிப் பாடு மொழுக்கம் தொல்காப் பியப் பொருட் பகுதியாலும், இறையனா ரகப்பொருளாலும், அகப்பொருள் புறப் பொருள் பற்றி எழுந்த பாடாண் பாக்க ளாலும் தெள்ளிதில் அறியப்படும். பொருள் வழி சொற் செறிந்து இறைநிலை மணங் கமழக் கனியும் இவ் விழுமிய தாகிய ஒழுக்க நிலை யொன்றே அறிவையும் உணர்வையும் மெய்ம்மை யிற் செலுத்தி இன்புறுத்த வல்லது. முதல்வனின் அருட் டன் மைகள் யாவும் உல கியற்கைப் பொருள்களின் வாயிலாகப் புல னாகின் றதினன், அப் பொருள்களின் இயற்கைத் தன்மைகளோடு புல னறிவு ஒன்றுபட, மக்களின் உள்ளம் உண்மை விளக்கத் திற் கிட மாகி, அருள் சுரக்கு மென்பது ஒரு தலை. உலகியல், அருளியல் அறிவுகள் யாவும், இயற்கைப்பொருள்களில் இரண் டற விரிந்து காணப்படும் இறைநிலை அருள் விளக்கங்களான் பெறப்படும் என்பது தெளிக. ஆசிரியர் கடுவெ ளிள வெயின னார், இறைவனை விளித்துப் பாடுங்கால்,

> 'நின், சுரத்தலும் வண்மையும் மாரியுள்ள
> நின், புரத்தலும் நோன்மையும் ஞாலத்துள '

என்று அருளியது, உலக இயற்கைத் தன்மையினைக் கிளந் தெடுத்தல் போல் விளங்கு மாயினும், அது பழம் பனுவல்களில் பயிற்சி யுடைய நுண்ண றிவுடையார்க்குப் பாடாண் ஒழுக்க விழுப்பத்தினையும், அருட் டன்மையினையும், தெய்வப் பெற்றி யினையும் நுட்பமாய்ப் புலப்படுத்தா நிற்கும் எனவே, உலக இயற்கை, உயி ரியற்கை முதலிய வற்றைக் கூறுதலின் வாயி லாகக், கடவுள் வாழ்த் தெல்லாம் அமையு மென்பது, பருப் பொரு ளறிவினுளரும் உளங் கொளற் பாலதே.

முறைமை செய்யும் மாநில மன்னவன், அருணிலைக் தண் ணது உல காதலானும், உலகியல் நடைபெற மழை இன்றி யமையாததானும், இறைவ னியல்பு விளங்கப் பெற்ற மன்ன வனையும், இறைவனது அருள் விளக்கத்தை இயற்கையிற் கொண்ட மழையினையும், முது தவத் தமிழ் நல்லோர் வாழ்த்தி

வழிபடுவ ராயின ரென்ற உண்மை, தொல்காப்பியப் பொருளிலக்கணத்துப் பாடாண் பகுதியால் விளங்கப் புலனுதல் காணப்படும். தெய்வப் புலமைத் திருவள்ளுவரும் பழந் தமிழ் மரபு அடி யொற்றி எல்லாம் வல்ல கடவுட் டன்மைக்கு முதன்மை தந்து, தம் சூறனூலில் மழைத் தொழி லின்றேல், உயிர்கள் பசிப் பிணியினுன் வருந்துவதைப் புல னுகுமாறும், உலகுயிர்கள் உலக இயற்கைவழியிலும் முதல்வனது அருள்வழியினும் ஒழுகினுலன்றி, அல்ல றுற்று அலமரு மென்ற உண்மையினை மன்னர் தொழிலோடு பொருந்துமாறும்,

> [௧] வானோக்கி வாழு முலகெல்லா மன்னவன்
> கோனோக்கி வாழுங் குடி.
>
> [௨] துளியின்மை ஞாலத்திற் கெற்றற்றே வேந்த
> னளியின்மை வாழு முயிர்க்கு.

என விதந்தருளுவா ராயினர். மற்றும் நாயனுர் கடவுள் வாழ்த்துக்கு அடுத்த படியாக, நீரின்றி உலகியல் நடவாமையை குறித்தற் பொருட்டு முதல்வனது அருள் வெளிப்பா டாகிய வான் சிறப்பை ஒப்புயர் வற்ற புலமைத் திறத்தாலே வைத்து, மெய்ப் பொருள் விளங்கத் தெருட்டி வைத்தார். அல்லாமலும், அப் பெரு நாவலர், எடுத்த எடுப்பிலே, 'வான் என்னும் மழையை அமிழ்த மென் றுணறரற் பாற்று' என உரைந்து, உல குயிர் கட்கும் மழை துப்பாய உணவுப் பொருள்களை யுண்டாக்கி, அவ்வுணவுப் பொருள்களை உண்பவர்க்குத் தானே உணவாகியும், பசிப்பிணியால் அவை இறந்து படாமற் காத்து நலம் பல பெருக்கி உலகியல் இடையறுது சீரும் சிறப்பு முற நடை பெறுதலை விளக்கி, மக்க ளுயிர் இயல்பாய் இயற்றுதற்குரிய இறை வழிபாடு, தானம் தவம் முதலிய அற உணர் வொழுக்கங்களும் வானமிழ்தத்து ஊட்டத்தினுல் நிகழற்பால தென முடிவு கட்டி, 'நீரின் றமையா துலகெனின் யார் யார்க்கும், வானின் றமையா தொழுக்கு' என்ற இறுதிக் குறட் பாவில், அறம் நிலை நிற்றற்கு உலகியலும், ஒழுக்கமும் இன்றியமையாத தென்ற உண்மையினை அறிவுறுத்தி, வான் சிறப்பென்னும் முகத்தால் வீட்டினை உறு விக்கும் விழுமிய பொருளாம், அருணிலைப் பேற்றின் சீர் சால் சிறப்பினை நன்கு குறிப்பித்து விளங்கவைத்தார். மழைச் சிறப்பும் இன்றியமையாமையுங் கண்ட மணிவாசக வள்ளலும் 'முன்னியவள் நமக்கு முன்சுரக்கு மின்னருளே யென்னப் பொழி

யாய் மழையேலோ ரெம்பாவாய்' என்று கூறியதும் ஈண்டறி யற்பாற்று.

மாரி உயிரை நிலை நிறுத்திச் செழிக்கச் செய்யும் அமிழ்த மாதலை 'வானின் றுலகம் வழங்கி வருதலாற், றானமிழ்த மென் றுணரற் பாற்று' என்ற குறளானறியப்படும். 'அமிழ்து திகழ் கருவிய கணமழை' என்பது பதிற்றுப்பத்து, சிந்தித் துணரின் அமிழ்தம் உண்ணப்படுதலின், உண வாயிற்று. ஆனால் அது மழைபோன்று உணவாகிப்பிற உணவையும் ஆக்குவதன்று. எனவே, மழை அமிழ்தத்தைவிட நனி சிறந்தது. மற்றும் அமிழ் தம் ஒரு சிறு பாலர்க்கும் கிடைப்பதரிது. ஆனால் மழையோ உலகத்து உயிர்களுக் கெல்லாம் துப்பாய துப்பாயிற்று. அமிழ்த மின்றேல் உயிர்கள் அதற்காக வருந்துவது கண்டிலம். ஆனால், மழை யில்வழி மழைக்காக வருந்தும் உயிர்கள் பல வாகும், எனவே, மழை அமிழ்தத்தினும் சிறந்ததென்பது உணரற்பாற்று. மாரி யின்றேல், பசி நோய் நீக்கும் உண வில்லாது உயிர்கள் சீர் குலைந்து வருந்தி அழியும். மாரி ஆக்கவும் அழிக்கவும் வல்ல தாய ஆற்றலுடையதாதல் பற்றி அது புகழ்ச்சிக்கு பெரிதும் உரித் தாவது. விரி நீர் வியனுலகும் மாரியா னன்றி கொடைப் பெருமை பெறாது. இறைலன் அருள்வழித் தாய வானால் நிலை பெறும் இயற்கை அரு ளொழுக்கத்தினைச் செயற்கையின் எய்தி யோர் கண்ணது உலக மாதலான், மாரிக்கும், உலகத்தி னியல்பு அறிய வல்ல செயற் கரிய செய்வோர்க்கு முள்ள இயைபினைப் பாரியின் வரலாற்றில் சற்றுக் காண்குவம்.

மன்னுயிர் மாட்டுப் பேரருள் கொண்டு, கொடையால் மாயாப் புக ழீட்டிய வள்ளல்கள் எழுவரில் ஒப்புயர் வின்றிச் சிறந்தவன் பாரியே என்பது, ஆளுடைய நம்பிகள், கொடையில் மேம்பட்டவர் பல ரிருக்கப், பாரியைக் கொடைக்கு எல்லை யாக, 'கொடுக்கிலாதானைப் பாரியே யென்று கூறினுங் கொடுப்பா ரில்லை' என எடுத்துக் கூறினமையான் பெறப்படும். காரி, ஆய், அதிகமான், நள்ளி, ஓரி முதலானோர், இரப்போர்க்கு இல்லை யென்னாது அன்னார்க்கு வேட்டவை யனைத்தும் ஈத் துவக் கும் பெரு வள்ளன்மையும் புகழும் பெற்றனர். பேகன் முன்னை யோர் போ லல்லாது, தனக் கென வாழாப் பேரரு ளுடைய

ஞய், ஒன்றுக்கும் பற்றாத மயி லொன்றின் குளிருக்கும் பரிந்து, தன் தனிப் போர்வையினை ஈந் துயர் புகழ் பெற்றான். ஆனால், பாரியோ தனது அரசிருக்கையாம் பறம்பு மலையொழிய, முந்நூ றூர்களையும் தன்னையும் இரவலர்க் கீந்தமை யன்றியும், கான கத்துள் படர்வதற்குக் கொழுகொம் பின்றித் தளரும் முல்லைக் கொடிக்குப் பரிவொடு, தானூர்ந்து வந்த தேரைக் கொடுத்து ஒண் புகழைப் பெற்றான். கல்வி. தறுகண், இசைமை, கொடை யெனச் சொல்லப்பட்ட பெருமித நான்கினுள் ஒன்றெனக் கூறிய கொடையில் தலைசிறந்த குறிப் பறிந் தீதல் என்பதற்கு எடுத்துக்காட்டாக இக் கொடை நின்று மிளிர்வது அறியப் படும். பாரியின் இத் தகைய வரையா வண்மை பாரிக்கே யன் றித் தமிழகத்தார்க்கும் பெருமிதத்தை அளிக்க வல்லது அறிந் துணர ற்பாலது.

தமிழக முழுவதும் புகழ்வய மாக்கிக், குன்றாக் கொடையில் குன் றென வளர்ந்து விளங்கிய குறுநில மன்னவன் பாரி யென் போன் முந்நூ றூர்களைத் தன்பாற் கொண்டு வளம் பயப்ப தாய தண் பறம்பு நாட்டிற்குத் தனித் தலைவன். எவ்வியெனும் மூத்த நற் குடியிற் றோன்றிய சீருடைச் செவ்வியோன். புலமை சால் தக்கோரை ஆருயிர்த் துணைவராகக் கொண் டொழுகும் பெற்றியன். 'புலங்கந் தாக விரவலர் செலினே, வரைபுரை களிற்றொடு நன்கல னீயு, முரைசால் வண்புகழ்ப் பாரி'; 'மாரி வண்பாரி'; 'பூத்தலையறாஅப் புனைகொடி முல்லை, நாத்தழும் பிருப்பப் பாடா தாயினுங், கறங்குமணி நெடுந்தேர் கொள்கெனக் கொடுத்த, பரந்தோங்கு சிறப்பிற் பாரி'; 'சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய .... பரம்பிற் கோமான் பாரி' எனப் பல் பெரும் புலவர்கள் பாடும் புகழுடையோன். மன்னின் மின் னிகர் வாழ்வில், 'இளமையு நில்லா யாக்கையு நில்லா, வளவிய வான்பெருஞ் செல்வமும் நில்லா, புத்தேள் உலகமும் புதல்வரும் தாரார், மிக்க அறமே விழுத்துணை யாவது' என்ற உண்மையை யுள்ளித் தனக்கு இயற்கையாய் வந்துற்ற வளம் தனக் குரித் தெனக் கருதாது பிறர்க்கு ஈதலும் இசைபட வாழ்தலுங் கொண்ட வள்ளல். இதனான் இவனது செல்வம் நீர் நிறைந்த ஊருணி போலவும், உள்ளூர்ப் பழுத்த பயன் மரம் போலவும், யாவர்க்கும் பயன்பட லாயிற்று. பல பயன்களையும் பயப்ப

தாய பறம் பரண் பக்கல் மாரி நாட் குயில் போல் மனம் புழுங்கி முற்றுகை யிட்ட முத்திறப் புரவலருக் கரிய பாரியி னூர்கள் இரவலர்க் கெளிய வாயின. இவ்வாறு இவன் கொடையா லீட்டிய புகழ் குவிந்து கொண்டே குன்றென வளர்ந்து நிற்க, அந்தப் பொன்றுப் புகழை மட்டும் பாரி யாவர்க்கும் கொடுத்தானில்லை. என்னெனின், மாரி போன்று வேற்றுமை நாடாது யாவர்க்கும் வாரி வாரிக் கொடுக்கும் பொருட் கொடையை பாரி கைவிட்டா னில்லை யாதலா லென்க. எனவே செல்வத்துப் பயன் ஈதலானதான், ஈதலே உயிர்க்கு ஊதிய மெனக் கருதி இசைபட வாழ்தலுக் குரியன் பாரி வள்ளல் என்பது தெளியப்படும். மற்றும், முடியுடை வேந்தர் மூவரும் பொறாமையின் விளைவால் நாற்படை கொண்டு பன்னாள் பறம்பை முற்றியும் கைப்பற்ற இயலாது, கலங்கினகாலைப் பாரிக் காருயிர் நண்ப ராய கபிலர் கூறும்,

> அளிதோ தானே பாரியது பறம்பே
> நளிகொண் முரசின் மூவிரு முற்றினு
> ... ... ... ...
> மரந்தொறும் பிணித்த களிற்றினி ராயினும்
> புலந்தொறும் பரப்பிய தேரினி ராயினுந்
> தாளிற் கொள்ளலிர் வாளிற் றாலன்
> யானறி குவனது கொள்ளு மாறே
> ... ... ... ...
> ... ... விறலியர் பின்வர
> வாடினிர் பாடினிர் செலினே
> நாடுங் குன்று மொருங்கீ யும்மே [புறம் 109]

என்றது போன்ற பன்னயங் கெழுமிய புறப்பாமாலையும் இசையும் பாரிக் காயிற் றென்பது கண்டுகொள்க. கொடையால் ஆறறி வுடைய மக்களும், மற்றும் சில பறவைகளும் விலங்கினங்களும் பயன் பெறப், பாரியின் கொடையால் ஓரறி வுடைய முல்லையும் பயன் பெற்றுள்ளதினுன், பாரியை பழிப்போர் போன்று மாரியோடு ஒப்பாக்கி, வாழு முயிர்களுக்குப் பயன் படும் பாரி மன்னனது கடப்பாடு கைம்மாறு கருதுவ தல்ல தென்பதை அறிவுறுத்த,

> 'பாரி பாரி என்றுபல வேத்தி
> யொருவற் புகழ்வர் செந்நாப் புலவர்

பாரி ஒருவனு மல்லன்
மாரியும் உண்டீண் டுலகுபுரப் பதுவே'

என வெறுத்த கேள்வி விளங்கு புகழ்க் கபிலர் புகழ்வா ராயி னர். பாரியை மாரியோடுவமித்த நயன் எந் நாட்டகத்தும் காண இயலாது. தமிழகத்துத் தமிழர் வண்மையினை எடுத்துக்காட் டும் திற னுற்றுள்ளது. இதனுன் பாரி மன்னனது கொடை வண்மை தமிழக முழுமையும் அகப்படுத்திய இமிழிசை வாய்ந்த தென்பது தெளியப்படும்.

மாரி யனைய பாரியின் கை வண்மை, மன்னுயிரை வருத்திச் சிறுமையே தரும் வறுமையைத் தீர்த்தலை நோக்கியது. பறம்பிற் கோமான் 'அறுகுளத் துகுத்தும் அகல்வயற் பொழிந்தும், உறு மிடத் துதவாது, உவர் நிலம் ஊட்டியும், வரையா மரபின் மாரி போலப்' பல்வேறு வகையினராய்த் தன்னை யடைந்த இரவலர்க் கும் பரிசிலர்க்கும் வேற்றுமை நாடாது யார்க்கும் ஒரு படித்தாக வரையாது கொடுத்து உவந்தனன். நீரின் றமையாது உலக மென்பது பொய்யாமொழி யாதலான், மழை யின்றி உலகியல் நடவாது. மற்றும், சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் முதலிய வற்றின் தோற்றுவாயை அறிய வல்ல வேள் பாரியின் அறக் கருணை யின்றியும், அருள் அறிவின்றியும் உலகத்தி னியல்பும் அமையாது. மழையால் மன்னுயிர் யாவும் பயன் பெறினும், மழை'யானே ஆக்கப்படுவது தாவர மென்க. கொடையால் மேம் பட்ட மற்றையோரது வள்ளன்மையால் மக்களும் பறவைகளும் பயன்பெறப், பாரியின் கொடையால் ஓரறி வுயி ராகிய முல்லைக் கொடியும் தளர்வதை விட்டொழித்துத், தன் னுயிரை நிலை நிறுத்திக்கொண் டுள்ள தென்பது ஈண் டுணரற் பாலது. உலகத் துயிர்கள் மழையால் இடையருது நின்று இயங்கி வருகின்றமை போன்று, கொடுக்கும் வள்ளியோ னுகிய பாரியினுல் உயிர்கள் யாவும் செயிர் நீங்கி உவகையுடன் வாழ்ந்தன என்பது அறியற் பாற்று.

உயிர்த் தன்மை நீரிடத்தே அமைந்து உலகிற்கு ஆதாரமாய் விளங்கலானும், மிகச் சிறிய புல்லும் மழையா னன்றி ஆகாதென லானும், மழையால் மன்னு வுலகத்து சிற்றுயிர்கள் யாவும் ஆக்கப்

பெறுகின்றன. அஃதே போன்று பாரியும், அருள் நலங் கனிந்த உள்ளத்த னாதலால், தன்னை வந் தடுத்தார் யாவர்க்கும் தன் பொருட் செல்வங்களைக் கொடுத்தலை மேற்கொண்டு, அன்னவர தூ முக மலர்ச்சியையும் ஆக்கத்தையும் கண்டு அக மகிழ்வு கொள்வன் எனவே, பயிர் முதலிய பல்லுயிர்களின் ஆக்கமும் கேடும் மழையாலும் மழை யின்மையாலும் காணப்படுதல் போன்று, குடிகளின் ஆக்கமும் கேடும் அறத்தாலும் மறத்தாலும் ஆளும் மன்னர் முகத்தே காண நிலைபெறும். வேள் பாரி மறம் கெடுத்து, அறம் பெருக்கிச், செங்கோன் முறை வழி ஆண்டு வந்ததினுன், அவன் கீழ் வாழும் குடிகள் ஆக்க முற்று வந்தன ரென்பது எளிதி லுணரத் தக்கது. மற்றும் அறம் பெருக்கி யார்மாட்டும் செவ்வி தாகிய முறை செய்த லுடைமையை மேற்கொள்ளும் வேந்தர் விரும்பிய வழி மழை விரைந்து பெய்யு மென்பது,

'அறம்புரிந் தன்ன செங்கோ னாட்டத்து
முறைவேண்டு பொழுதிற் பதனெளி யோரீண்
டுறைவேண்டு பொழுதிற் பெயல்பெற் றோரே'

என்ற வரிகளான் நன் கறியப்படும். உரிய பருவத்தில் வேண்டிய மழை உரிமையுடன் பொழிதல் மன்னர்தம் செங்கோல் நிலைமையைச் சார்ந்துள்ள தென்பது 'இயல்புளிக் கோலோச்சு மன்னவ னாட்ட, பெயலும் விளையுளுந் தொக்கு' என்ற குறள் வெண்பாவால் புல னாகும். மற்றும், அருந்திறல் அரசர் முறை மாறின், வானமும் பெயலும் மாறு மென்பது, 'முறைகோடி மன்னவன் செய்யி னுறைகோடி, யொல்லாது வானம் பெயல்.', மேகம் வெண் மாரி பெய்து பயிர்களையும் உயிர்களையும் வளர்த்தல் போன்று, பாரி, இரவலர்க்கு எளியராய் மாசறு பொன் மாரி பொழிந்து உயிர்களைப் போற்றி வளர்த்தது உளங்கொளற் பாலது. மற்றும், ஞாலம் பெரிய தாயினும் மழையா னன்றி அதற்குக் கொடைப் பெருமை யிலாத வாறு போன்று, தமிழகத்து வண்மைக்கு, மறம் கெடுத்து அறம் பெருக்கிக் கோல் கோடா தாண்ட வள்ளல் பாரியின் கொடைப் பெருமையா னன்றிப், பிறிதொரு பெருமித மில்லை. அஃதாமன்று; அக் குறுநில மன்னவன் கோல் அறத்திற்கு மாதியாய் நின்றது பற்றி, பாரிக்கு வானும் நிலனும் புள்ளு மொருங்கே வளஞ் சுரந் தருளினதால், பறம்பு நாட்டில் உயிர்க ளனைத்தும் உழவரால்

உழுது விளைக்கப்படாத நால் வகைப் பயனால் உவகை பூத்து வாழ்ந்தன ரென்பது போதரும். பாரியின் பறம்பு நாட்டைப் புலவர் போற்றும் பொய்யா நாவிற் கபிலர்,

'கோஒல் செம்மையிற் சான்றோர் பல்கிப்
பெயல்பிழைப் பறியாப் புன்புலத் ததுவே'

எனப் புகழ்ந்தது முகத்தான், பாரி கருதி வேண்டிய வழித் தீங் கின்றித் திங்கள்தோறும் மும்மாரி பெய்த தென்பது தெளிவு. பாரியின் கொடையா லெய்திய புகழ் நாற்றிசையிலும் பரவவே, அதனைக் கேள்வியுற்ற முடியுடை மூவேந்தரும் அழுக்கா றுற்றுப், பாரியின் பறம்பு மலையினைச் சுற்றி முற்றுகை யிட்ட ஞான்று, பாரிக் குடி படைகளும் உணவைக் குறித்துக் கவ லுரு திருக்க அன்னவர்களுக்குப், பறம்புக் கிள்ளைகள் சேய்மைக் கண் ணுள்ள விளை நிலங்களிலிருந்து நெற் பயிர் கொணர்ந் தளித்து, உடுக்கை யிழந்தவன் கைபோல் இடுக்கண் களைந்து நட்புரி மையை விளக்கிநின்ற நிகழ்வு,

'... ... ... பாரிபறம்பின்
நிரைபறைக் குரீஇயினம் காலைப் போகி
முடங்குபுறச் செந்நெற் றரீஇய வோராங்
கிரைதேர் கொட்பின வாகிப் பொழுதுபட
படர்கொள் மாலைப் படர்ந்தாங்கு'

என்ற அகப்பாட்டால் (303) நன்குணரப்படும்.

மாரியைப் போன்று பாரி கைம்மாறு கருதாதே, உள்ளதை ஒளியாமல், யாவற்றையு மொருங்கே பெரியோர்க்கும், சிறி யோர்க்கும், கற்றோர்க்கும் கல்லாதார்க்கும், நண்பர்க்கும் பகை ஞர்க்கும், இல மென்னு மெவ்வ முரைத்தார்க்கும் உரையா தார்க்கும், மற்றும் அஃறிணை உயிர்களுக்கும் அடிக்கடி கொடுக் கும் இயல்பு இயற்கையாய் அமையப்பெற் றுள்ளது கருதற் பாலது. சிறப்பாக முல்லைக்குத் தேர் வழங்கியது பாரியினது வள்ளன்மையினையும் வரையாமையினையும் குறிப்ப தாகும். கொடை மடம் ஆகிய வள்ளன்மை, தக்கார் தகவிலர் என்ற உயர்வு தாழ்வினை உணர்ந்து, தகுதி யில்லாரை நீக்காமை யாகிய வரையாமை என்ற இரு தன்மைகளும் இறைவற் குரிய தாதலால், இறைவனை வள்ளல் என்பார் தமிழறிஞர். கொடை

மடம் பட்டு வரையாது வழங்கின தன்மையான் பாரி, வள்ள லாகி, ஓராற்றாற் கடவுளோ டொப்பக் கருதப்பட்டா னென்பது உணரப்படும். மழையினால் மன்னுயிர் யாவும் பயன் பெறினும், வானம் வழங்குதல் இயற்கை நிகழ்ச்சி. ஆனால், வள்ளியோரின் உள்ளி யுதவும் உயி ருணர்ச்சி அதன்பா லிலதாம். எனவே, பாரி யென்ற வள்ளியோன், மாரி நாண நிலைபெற்ற உயர்ச்சி யுடையா னென்பது சற்றுய்த் துணரற் பாலது.

வாயார வாழ்த்தினார்க்கும் அல்லாதார்க்கும் வரையாது கொடுக்கும் வள்ள லாகிய பாரி மாரி போன்று, இடி முதலிய கொடுமைகளுடன் சூழ்ந் திராது என்பும் நெகிழுமாறு இன் சொல், நகை கூடிய நலம் பல கனிந்து, உவகை நிரம்பிய உள்ளம் வாய்ந்து இனிய நீரனாய்த் திகழ்ந்து வந்தமை, புறப் பாக்களா னறியப்படும். பருவங்கண்டு தண்ணருண் மாரி பெயல் மாறி னும் வள்ளல் பாரி யாண்டும் செயல் மாறாது என்றுங் காத்தலைத் தவிராத அருள் நல முடையான். முன்னாளே பெய்து விட்டோ மென மாரி பெய்யாது மாறினும், அதனால் நிலம் விளைவை யொழியினும் எவ்வுயிர்க்கும் வாழ்க்கை யிலதாம். ஆனால் இயற்கையாய் ஈந்து மகிழ்வு கொள்ளும் பாரி போன்ற வள்ளி யோர் செல்வ மிலராய் வறுமையான் கொடுத்த லிலாக் காலை யினும், மாரியைப் போன்று இல்லை யென மறுக்குஞ் சிறுமையு மில்லாது இரப்போரை எவ்வகை யானும் காத்தலையே முறை மையாகப் பரிகரிப்பர். இதனான் விண்ணகத்து மாரியைவிட மண்ணகத்துப் பாரியின் ஏற்றத்தா லாய பேரொளியின் மாட்சி புலனாம்.

இது காறுங் கூறியவாற்றால், மாரிக்கும் பாரிக்கும் நெருங் கிய இயைபு உண்டெனினும், விஞ்சிய சிறப்பு. பாரியின் பால தாகு மென்பதூஉம், இறைவ னியல்புகள் தம்மாட்டு விளங்கப் பெற்ற வேள் பாரியின் கொடை வண்மையால் அவனது குடி மக்கள் வானம் வேண்டா வறனில் வாழ்க்கை யுடையராய் வயங்கின ரெனலும், வள மழை சுரந்தன்ன ஈகையான் பாரி வள்ளல், வாய்மொழி நிலைஇய சேண் விளங்கு விழுப்புக ழெய் தின னென்பதும் ஒருவாறு துணியப்படும். சைய நிகர் வையத்தை இவ் வையகத்தில் ஓரறி வுயிர்க்கு வழங்கி இசை நல் லீகைக்கு எடுத்துக்காட்டாக விளங்கிய தமிழகத்துப் பாரியைப் போன்று பிறரெவரும் இது காறும் எந்நாட்டிலுமில்லை யென்பதை நினைக்குங் காலை, மருட்கையினை விளைப்பதாகும். மற்றும் எவ் வுயிரிடத்தும் அறம் வளரும் நெஞ்சமொடு அன்பு செலுத்தும் பாரியினது அருள் நிலையினை வியத்தொறும் வியப்பிறந்தன்றே.

# உள நூல்

வித்துவான், திரு. M. குஞ்சிதபாத தேசிகர்,
தலைமைத் தமிழாசிரியர், உயர்நிலைப் பள்ளி, திருவாரூர்.

## கற்பனை.

கற்பனை என்பது மனன் உணர்வால் ஒன்றனைப் பொருந்துமாறு அமைத்து மகிழச் செய்யுந் தன்மைக்குப் பெயராகும். இத் தன்மையை எய்துதற்கு உலகியல், கல்வி யறிவு இவ்விரண்டு முடையாராலே மக்கள் ஏற்று மகிழ அழகு படுத்துகின்றவை எவையோ அவையே சிறந்தனவாகக் கொள்ளப்படும். இத்திறனுற்றான் மக்கள் வர வர உலகில் முன்னேற்றத்தினையும் நன்மையையும் அடைந்து வருகின்றார்கள். இத்திறன் மனத்திற்கு இல்லை யானால் புதிய மாறுதலை உலகில் காண முடியாது.

தூக்கணங் குருவியால் கட்டப்படும் கூடு பார்வைக்கு வெகு அழகாகக் காணப்படுகின்றது. செயற்கையாகச் செய்ய வேண்டுமென்றால் கூடச் செய்வது அருமையாகும். ஆனாலும் பல ஆண்டிற்கு முன் அமைத்தபடிதான் தூக்க ணங் குருவி இன்று கூடு கட்டுகின்றது. மனிதனால் சென்ற ஆண்டிற் கட்டும் வீடு பல நன்மையுள்ள மாறுதலுடன் காணப்படுகின்றது. ஆகையால், கற்பனை என்ற ஆற்றல் மனிதனின் மனத்தில் இயல்பாகவுள்ள ஒரு தன்மையாகும்.

இக் கற்பனையாகிய ஆற்றல் கவிஞர், சித்திரம் வரை வோர், சிற்பி ஆகிய இவர்களிடம் சிறந்திருப்பதைக் காண லாம். கற்பனையின் ஆற்றலாற்றான் மனிதன், விடத் தன்மை வாய்ந்த பொருளைக்கூட மருந்தாகவும், தொட் டாற் கெடுதி யுண்டாக்கும் மின் ஒளியையும் பல வேலை களைச் செய்யவும் உபயோகப்படுத்துகின்றான்.

இக் கற்பனையின் ஆற்றலாலே தான் புதிய கருத்துக்களைப் பல மக்களுடைய மனத்திற் பதிவிப்பதுடன் அவரவர்களுடைய மனத்தையே தன் வயப்படுத்தி விடுகின்றுன் கற்பனையாளன்.

கற்பனையானது அவரவர்கள் மூன் தெரிந்துகொண்டுள்ள முன்னறிவிற்கும் இயற்கையான மனன் உணர்வுக்குந் தக்கவாறு மாறுதல் அடையும். இவ்வாற்றலால் தான் ஒரு உபயோகத்திற்குரிய ஒரு பொருளையே பலவிதமாக உண்டாக்குகின்ருர்கள். ஒரு கருத்தையே பல கவிஞர்கள் பல விதமாகப் புனைந் துரைக்கின்ருர்கள். இவ்வாற்றல் கொண்டு பல வகையான (பொறிகள்) இயந்திரங்கள் உண்டாக்கப்படுகின்றன.

முற்காலத்தில் மக்கள் கற்பனையில் அதிகமாக ஈடுபடாத காரணத்தால் வாழ்க்கைக்குவேண்டிய பல பொருள் அக்காலத்தில் வேண்டாமலே வாழ்ந்துள்ளார்கள்.

## கற்பனையும் கவியும்.

ஒரு புலவனுற் செய்யப்பட்ட கற்பனையோடு கூடிய கவியை ஆராய ஆராய, புதிய பொருள் உண்டாகும் நயம் பொருந்தியதாக இருக்கும். இவ்வித கற்பனையோடு கூடிய செய்யுட்கள் தமிழ் மொழியுள் பற்பல உள்ளன. இங்கு உதாரணமாக இரண்டொரு செய்யுட்களை மாத்திரம் எடுத்துக்காட்டுதலே நோக்கமாகும்.

மருத நிலத்தின் வளப்பத்தைச் சொல்ல வந்த கம்பர் மருத நிலமானது மிக்க செழுமையாக இருக்கிறதென்ருவது நீர் வளப்பமுள்ளது என்ருவது, பல நீர்ப் பூக்களை யுடைமையான் செழுமை மிக்கது என்ருவது கூறலா மல்லவா? அவ்விதம் கூருமல் கம்பர் மயில், தாமரை குவளை, வண்டு இவை கம்பர் மனத்திற்கு ஞாபகத்திற்கு வந்தன. இவற்றை வைத்து மருத நில வளப்பம் வள முறுவதுடன்

பாட்டும் வளமுற வேண்டும் என எண்ணினர். மயிலாடவும் ஆட்டத்தைப் பார்க்கத் தக்கவாறு தாமரை தனது மலராகிய விளக்கைக் காட்டவும், குவளை மலர்கள் நாடகம் பார்ப்பவர் கண்களாகவும் அலைகள் திரைச் சீலையாகவும் வண்டுகளின் இனிய ஓசை யாழாகவும், மருதம் கவலையின்றி வீற்றிருக்கும் தலைமைத் தன்மையுடையவராகவும் ஓர் புதிய நாடக அரங்கு கற்பனையால் மருத நிலத்தில் இருக்கிறது என்று படிப்போருள்ளத்தில் பதிய வைக்கின்றூர். அச்செய்யுள்,

" தண்டலை மயில்களாடத் தாமரை விளக்கந் தாங்கக்
கொண்டல்கள் முழவின் எங்கக்குவளை கண்விழித்துநோக்கத்
தெண்டிரை எழினிகாட்டத் தேம்பிழி மகரயாழின்
வண்டுகளினிதுபாட மருதம் வீற்றிருக்கு மாதோ."

நடனம், இசை, விளக்கு, திரை இவை நாடகத்திற்கு இன்றியமையாத பொருள்களல்லவா?

இவ்வாறே மனனுணர்வால் புகழேந்திப் புலவர் தமது நளவெண்பாவில் அழகுபடுத்தும் செய்யுட்கள் உள. அவற்றில் ஒன்று மாத்திரம் குறிக்கின்றேன்.

தலைவராயுள்ளோர் வெளிவரின் வெளிவருவதற்கடையாளமாகச் சின்னம் ஒலிக்க, மெய்காவற்காரர் கூடவர, வரவேற்புமாலை தோளில் அசைய, மெதுவாக நடப்பார்களல்லவா. இதனை மனத்திலெண்ணி அந்திக் காலத்தை அழகுபடுத்தியுள்ளார். அது,

" மல்லிகையே வெண்சங்கா வண்டூத வான்கருப்பு
வில்லி கணைதெரிந்து மெய்காப்ப—முல்லையெனும்
மென்மாலை தோளசைய மெல்ல நடந்ததே
புன்மாலை அந்திப் பொழுது."

என்ற செய்யுளேயாம். ஒரு வெண்பாவிலே உணர்ச்சியுடன் கூடிய பொருள் அமைதியுடன் அழகுபடுத்துதல் சாதாரணப் புலவர்களால் முடியுமா?

(தொடரும்)

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்திகளைத் திரட்டலால், பயிர்த் தொழிலைச் சார்ந்த அமைவலவர் (Agricultural Engineers) பயனடைவர். ஏரீர்ப்பி கலை அளவிடும் கருவி, எறுழ்க்காறுவி (Dynamometer) எனப்படுவது. அது, கம்பிச்சுருளா லான வில்லைக் கொண்டது. அவ் வில்லானது, முறையே, பல வளவுகளுக்கு நீட்டப்படற் கான வலிமைகளி னளவுகள் குறிக்கப்பட்டது. கலப்பையின் நுகத்தடியை உழுபடையுடன் தொடுக்கும் குறுக்ளுகைக் கட்டையில், எறுழ்க்காறுவி யொன்று தக்கவாறு பொருத்தப்படும். ஏரோட்டப் பட்டுப்படைவாள் வெட்டும்போது, அக்கலப்பை யிழுபடும் வலிமையி னளவு எறுழ்க்காறுவியால் சுட்டப்படும். தக்கவா றுன சாதன வமைப்பை யொட்டி, அவ்வாறுன அளவைக் குறிப்புக்கள் தொடர்ச்சியாய் பதியப்படுகின்றன. அடுத்தடுத்துள்ளவாறு படைசால் செல் பள்ளங்கள் பல வெட்டப்படும் வண்ணம் ஏரோட்டப்படுகிறது. ஒவ் வொன்றையும் ஒட்டிய அளவைக் குறிப்புக்கள் குயிற்றப்படுகின்றன. அவ் வாறுன அளவைக் குறியீடுகளைக் கொண்டு, வயலைக் காட்டும் வட்டிகையின் (Map) மீது கோட்ட வரிகள் (Contour lines) வரையப்படுவன. அவ் வட்டிகையிலேயே, மண் தொய்களின் பருமனளவைகளை யொட்டிய வரிகளும், ஈரப் பதன் புகறும் அளவைகளை யொட்டிய வரிகளும் வரையப்படுகின்றன. அங்ஙனமாகப் பெறப்படும் வயற் குறிப்பு வட்டிகையினின்று, அக்கழனி கொண்ட மண் பாத்துக்களைப் பொறுத்த செய்திகள் திருந்திய அளவைத் தகவினவாய்த் தெளிவுற அறியப்படுவன.

ஏரின் படைவாள் நிலத்தினூடே வயங்கும்போது மண் துகள்களின் மீது உறுத்தப்படும் பலதிற வலிமைகள் பின்வருமாறு வகையீடு செய்யப்படுவன.

(1) உழுபடைப் பரப்பி னின்று அதற்குச் செங்கோணமாய் வெளி போகு வாட்டத்தில் உறுத்தப்படும் வலிமை.

(2) கிராவண வலிமை.

(3) குறித்த துகளின்மீ துள்ளதன் கனம், அதை அமுக்கலாலன வலிமை.

(4) உழுபடைப் பரப்பினுக்கும் துகளுக்கு மிடை யுள்ள உராய்வு வலிமை.

(5) குறித்த துகளுக்கும் அதன் மருங்கி லுள்ளவற்றினுக்கும் இடை ஒன்றைப் பொறுத்து ஒன்ருய் நேரிடுகிற உகைத்தல்களை யொட்டி விளைகிற சரிவுறுத்து மிடல்களும், அழுத்து வலிமைகளும் நீட்டீர்ப்பு விறல்களும் (Shearing, Compressive and Tensile Stresses). அவற்றில் கிராவண வலிமையைத் தவிர மற்ற எவையும் நிலைப்படி யான அளவைத் திட்டத்தினவா யில. உழுகைச் சாலில் அவை, துடிக்குத் துடியாயும், இடாகுக்கு இடாகுவாயும் வேறுபட்டு வருவன. முக்கியமாக, உராய்வு வலிமையானது நீருக்கும் மண் ணுக்குமான வீதத் தகவைப் பொறுத்து மிகவும் வேறுபடுகிறது. அப் பிறழ்ச்சிகள் நூற்றுக்கு நூருன வீதம் வரை இருக்கலாம்.

கலப்பையின் படைவாளால் ஆற்றுவிக்கப்பட வேண்டிய வினைத் தகவுக்கும் பொருத்தமான வடிவங்கொண்டவாறு, அஃது அமைக்கப்படல் வேண்டும். படைவாள் அரிந்த மண் துண்ட மொன்று அதன் முனைமீது செங்குத்தாய் நிறுத்தப்படுகிறது. பிறகு அத்துண்டம் செதுக்கப்படற்கு முன் தடவையாகக் கிளப்பப் பட்ட துண்டத்தின் மீது சாயும்படி தள்ளப்படுகிறது. ஆதலால், அவ் வாருக வெட்டிக்கிளப்பிச் சாய்த்துக்கொண்டே செல்லற்குத் தக்கவா ருன வண்ணக வளை வடிவத்தினுய் ஏர்ப் படைவாள் அமைக்கப்படுகிறது. இன்னும், உழவு நடையேறும் விரைவி னளவு மிகுதியாக, ஆக உழுதற் கான வேலையி னளவு மிக்கதா யாகி வரும். ஆனுல், அவ் வாருன மிகையின் வீத வளவு சொற்பமே. மணிக்கு இரண்டு மைல்கள் என் ருன விரைவினின்று மணிக்கு நான்கு மைல்கள் என்ருன வாறு விரைவி னளவு மிகைப்படலை யொட்டி, வேலையி னளவு நூற்றுக்கும் நூற்றுப் பத்துக்குமான வீதத் தளவே மிகுதி யாவது. அஃதாவது, விரைவி னளவு மிகையில் பத்தி லொரு பங்கு வீத மான வளவினதாகவே வேலைப் பெருக்கத்தி னளவு இருப்பது. ஆதலால், சிறி தளவான வேலைக்கூடுதலைப் பொருட் டேன வெண்ணுவிடின், உழவுப் பணியை வல்லிதின் முடித்துவிடலாம். அங்ஙனம் செய்து முடித்தல் பய னுடைத்து. அடுத்த

படியாக நாம் கருதவேண்டுவ தான முக்கிய செய்தி, மண்ணி னூடே நீர் பொசிந்து அதனில் ஊறப்பெற் றிருத்தலைப் பற்றினது. சோதனை மன்றத்தில் ஆய்ந் தறியப்பட் டுள்ள கூர லிழைப்புரை யியவு (Capillarity) என்ற் நிரல்பாற் பட்ட விதிகளை அடிப்படையாய்க் கொண்டவாறு, மண் ணுக்கும் அதி லரும்பும் நீருக்குமான தொடர்புக ளிருப்பன. புனலிக ளானவை (Lidiqs) அவற்றில் செங்குத்தாய் நிறுத்தப்பட்டவா றுன மெல்லிய துளையுடைக் குழாய்களி னூடே ஏறலை யொட்டிய உழுவலே, கூரலிழைப்புரை யியவு எனப்படுவது. அந் நிரலைப் பொறுத்து நிலத்தைக் கருதுங்கால், அது பேரெண்ணிக்கை யான இட்டிகைகள் புரை யோடினவாறு யுள்ள அமைப்பினது எனக் கொள்ளல் பொருந்தும். அவ் வா றுன இட்டிகைகள், பக்கம் பக்கமாய் இவர்ந்தவாறு பல தொகுதிகளா யாகி, ஒவ்வொரு தொகுதியி லமைந்தவை முறையே, ஒன்றின்மீ தொன்றாய்ப் புல்ல லானபடி தொடுக்கப் பட்டவாறு யிருப்பன எனக் கொள்வோமாயின், அவை யெல் லாம், ஒன்றின் பக்க மொன்றாய் நிறுத்தப்பட்ட பெருந் தொகையின வான மெல்லிய துளை யுடைக் குழாய்களைப் போன் றிருப்பன, எனக் கருதலாம். அத் துளைகளினது இடைத் தகவணி யான (Average) குறுக்களவு, மண் துகள் களின் அளவையும், அவை பொருந்தலான நெருக்கப் பாங் கின் வரையறையையும் பொறுத்திருப்பது. அத் துகள்கள் ஒல்லும் வரை ஒன்றையொன்று அணுகி வந்து மிக நெருக்க மாய் அடர்ந்துள்ள பொது, அவற்றிடை யான இட்டிகைகளி னளவு துக ளளவின் மடங்கினதா யிருப்பதாகும். இந் நிலைமையில் நில முள்ளபோது, அதன்மீது மழை பெய்கிறது. எனவும், அம் மழைநீர் மண்ணால் உறிஞ்சப்படுகிறது எனவும் கொள்வோம்.

(தொடரும்.)